நகராட்சி அலுவலகம்,
களக்காடு.

நாள். 26.12.2023.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2023ம் வருடம் டிசம்பர் மாதம் 29ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 12.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

| நாள். | தீர்மான எண். | மன்ற பொருள் | மன்றத்தின் முடிவு |
|---|---|---|---|
| 29.12.2023 | 386 | **பொருள் எண். 01**<br>களக்காடு நகராட்சி புதிய பேரூந்து நிலையத்தினை மேம்படுத்தும் பணிக்காக ரூ.176.00 (திட்ட மான்யம் ரூ. 88.00 இலட்சம் + நகராட்சி பங்கு ரூ.88.00 இலட்சம்) இலட்ச மதிப்பீட்டிற்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 21062 / 2023 / SS2, நாள்.15.12.2023–ன்படி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் பதிவு செய்யலாம். | பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. |
| 29.12.2023 | 387 | **பொருள் எண். 02**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட கீழப்பத்தை சர்வே எண். 1118 (7)ல் சமுதாய நலக்கூடம் கட்டும் பணிக்காக ரூ.100.00 இலட்ச மதிப்பீட்டிற்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7628/2022/MA1, நாள். 09.10.2023ன்படி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் பதிவு செய்யலாம். | பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. |
| 29.12.2023 | 388 | **பொருள் எண். 03**<br>களக்காடு நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ரூபி.R. மனோகரன் அவர்களது பரிந்துரையின் பேரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023–2024ன் புதிய பேரூந்து நிலையத்தின் முன்பு நுழைவு வாயில் அமைக்கும் பணிக்காக ரூ.11.00 இலட்ச மதிப்பீட்டிற்கான நிர்வாக அனுமதி, மாவட்ட ஆட்சித்தலைவர், மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். அ8/3492/2023, நாள். 16.11.2023ன்படி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும். | பார்வையிடப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் பதிவு செய்யலாம். | |
| 29.12.2023 | 389 | **பொருள் எண். 04**<br>களக்காடு நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ரூபி.R. மனோகரன் அவர்களது பரிந்துரையின் பேரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2023–2024ன் கீழ் அண்ணாசிலை அருகில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணிக்காக ரூ.20.00 இலட்ச மதிப்பீட்டிற்கான நிர்வாக அனுமதி, மாவட்ட ஆட்சித்தலைவர், மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். அ8/3492/2023 நாள். 31.11.2023ன்படி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் பதிவு செய்யலாம். | பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. |
| 29.12.2023 | 390 | **பொருள் எண். 05**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 17, காந்தி வீதியில் உள்ள இந்நகராட்சி பழைய அலுவலக கட்டிட வளாகத்தில் இந்நகராட்சி வருவாயினை பெருக்கும் நோக்குடன் ரூ. 133.00 இலட்ச மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்ட 6வது மாநில நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் (2022–2023) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |
| 29.12.2023 | 391 | **பொருள் எண். 06**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட கீழப்பத்தை பகுதியில் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை தொடங்குவதற்கு முன் சம்பந்தப்பட்ட இடத்தில் மண் பரிசோதனை மற்றும் கட்டுமான வரைபடம் ஆகியன அரசு பொறியியல் கல்லுரரியில் இருந்து பெறப்பட வேண்டும். அதன் பொருட்டு சம்பந்தப்பட்ட கல்லுரரிக்கு ரூ.71833/–செலுத்த வேண்டியுள்ளது. எனவே இச்செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மேற்கண்ட செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம். முதல்வர், அரசு பொறியியல் கல்லுரி, பாளையங்கோட்டை அவர்களின் கேட்புபடி ரூ.71833/–ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம். | அரசு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயல்பட அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td>29.12.2023</td>
<td>392</td>
<td><u>பொருள் எண். 07</u><br>களக்காடு நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனங்கள் TN72CV2781, TN72CV2718 ஆகியவற்றுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் வகைக்கு ரூ.15181/- டெரிக் மகேந்திரா, திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது. எனவே இச்செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>மேற்கண்ட செலவினத்தினை மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td>
<td>அரசு சட்ட திட்டங்களுக்கு ட்பட்டு செலவிட அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
<tr>
<td>29.12.2023</td>
<td>393</td>
<td><u>பொருள் எண். 08</u><br>களக்காடு நகராட்சியில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் ஒப்பந்த விளம்பரங்கள் கீழ்கண்ட நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அதன் வகைக்கு சம்பந்தப்பட்ட நாளிதழ்களின் பட்டியலின்படி விளம்பர கட்டணமாக ரூ.78675/- செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நாளிதழ் பெயர்</th><th>பில் எண். மற்றும் நாள்.</th><th>வழங்கப்பட வேண்டிய தொகை (ரூ)</th></tr>
<tr><td>1.</td><td>தினத்தந்தி</td><td>2324TVL371 035308/ 20.10.2023</td><td>11844</td></tr>
<tr><td>2.</td><td>தினமலர்</td><td>TV-3987- 4183/ 23.10.2023</td><td>21000</td></tr>
<tr><td>3.</td><td>மாலைமுரசு</td><td>AD2324070 6/ 20.10.2023</td><td>9900</td></tr>
<tr><td>4.</td><td>தினமணி</td><td>TNI1329091/ 23.10.2023</td><td>9975</td></tr>
<tr><td>5.</td><td>மாலைமலர்</td><td>TNL- D23100236/ 22.10.2023</td><td>10080</td></tr>
<tr><td>6.</td><td>மதுரை மணி</td><td>219/2023/ 2024/ 31.10.2023</td><td>15876</td></tr>
<tr><td></td><td colspan="2">மொத்தம் ரூ.</td><td>78675</td></tr>
</table></td>
<td>அரசு விதிப்படி செலவிட அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலகக் குறிப்பு:**<br>மேற்கண்ட செலவினத்தினை மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | |
| 29.12.2023 | 394 | **பொருள் எண். 09**<br>களக்காடு நகராட்சி மற்றும் 7 நகர பஞ்சாயத்துக்களுக்கான கூட்டு குடிநீர் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு தனது அரசாணை எண்.80, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 22.06.2023ன்படி நிர்வாக அனுமதி வழங்கி மேற்படி திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்த ஆணையிட்டுள்ளது. அதன் அடிப்படையில், களக்காடு நகராட்சிக்கு ரூ.58.03 கோடி மதிப்பீட்டில் மேற்கண்ட திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது. மேற்படி திட்டத்திற்கான முன்னேற்பாடு பணிகளாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க திட்ட மதிப்பான ரூ.58.03 கோடியில் 1 சதவீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அவ்வொரு சதவீத தொகையான ரூ.58.03 லட்சத்தில் 0.6% தொகை TUFIDCO நிறுவனமும், 0.4% தொகையினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் செலுத்த வேண்டும் என செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருநெல்வேலி அவர்கள் தெரிவித்துள்ளார், எனவே, மேற்கண்டவாறு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்புக்கு 0.4% தொகை ரூ. 23.20 லட்சத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மேற்கண்ட தொகையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரித்திற்கு செலத்த மன்றம் அனுமதிக்கலாம், இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் வரவு நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | சட்ட விதிப்படி செலவிட அனுமதிக்கப் படுகிறது. |
| 29.12.2023 | 395 | **பொருள் எண். 10**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 09, சிங்கம்பத்து பகுதியில் சர்வே எண். 542ல் களக்காடு நகராட்சி மக்களின் நலனை கருத்திற்கொண்டும், இந்நகராட்சிக்கு வருவாயினை அதிகரிக்கும் பொருட்டும் ரூ. 450.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக சந்தை அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 29.12.2023 | 396 | **<u>பொருள் எண். 11</u>**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 09 சிங்கம்பத்து பகுதியில் சர்வே எண். 542ல் புதிதாக கட்டப்படவுள்ள சந்தை கட்டிட கட்டுமான பணிக்கான மண் பரிசோதனை, மற்றும் கட்டுமான வரைபடம் தயாரித்து வழங்க முதல்வர், அரசினர் பொறியியல் கல்லுாரி, பாளையங்கோட்டை அவர்களின் கேட்பு படி ரூ. 119180/- செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | சட்ட விதிமுறையை பின்பற்றி செலவிட அனுமதிக்கப் படுகிறது. |
| 29.12.2023 | 397 | **<u>பொருள் எண். 12</u>**<br>இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN72CV2767ல் ஏற்பட்ட பழுதுகளை சரிபார்க்க டெரிக் மகேந்திரா, திருநெல்வேலி நிறுவனத்திற்கு ரூ.9490/-செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | சட்ட விதிமுறைகளை பின்பற்றி செலவிட அனுமதிக்கப் படுகிறது. |
| 29.12.2023 | 398 | **<u>பொருள் எண். 13</u>**<br>மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க இ-சேவா கேந்திர திட்டத்தினை களக்காடு நகராட்சிப் பகுதியில் செயல்படுத்த இந்நகராட்சிக்கு சொந்தமான கோவில்பத்து சமுதாய நலக்கூடத்தில் உள்ள சுய உதவிக்குழு கட்டிடத்திற்கு மாத வாடகை நிர்ணயம் செய்து வழங்கப்பட்டது. இந்நிலையில் சார்பு நீதிமன்ற நீதிபதி அவர்களின் கடிதம் எண்.1428/2023, நாள்.08.11.2023ன்படி வாடகை மதிப்பீடு பட்டியலில் வணிக கட்டிடத்திற்கான மதிப்பீடாக உள்ளது. இ-சேவா கேந்திர திட்டம் பொதுமக்களுக்காக தொடங்க இருப்பதால் சேவையை கருத்திற்கொண்டு வாடகை மறு நிர்ணயம் செய்து தர கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வரியில்லா இனம் பதிவேட்டின்படி சுயஉதவிகுழு கட்டிடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை ரூ.300/- என நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | ---- |

| | | | |
|---|---|---|---|
| 29.12.2023 | 399 | <u>**பொருள் எண். 14**</u><br>களக்காடு நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் 2023–2024ன் கீழ் கீழ்கண்டவாறான பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 16496/2023/ EA–2 நாள். 22.11.2023ன்படி அனுமதி வழங்கப் பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள 2023–24 ஆம் நிதியாண்டில் Untied Grant ஆக ரூ.56.62 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ. 1.38 லட்சம் இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் | சட்ட விதிமுறைப்படி செயல்படவும். |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | களக்காடு நகராட்சி வார்டு எண்.23 (171023R0281) சிதம்பராபுரம் ராஜபுதுர் நாடார் தெருவில் பேவர் பிளாக் சாலை மற்றும் கழிவு நீரோடை, சிறுபாலம் அமைக்கும் பணி. | 19.00 |
| 2. | களக்காடு நகராட்சி வார்டு எண்.20 (171020R0246) வியாசராஜ புரம் பஸ்டாண்டு கீழத்தெரு நடுவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | 20.00 |
| 3. | களக்காடு நகராட்சி வார்டு எண். 20, வியாசராஜபுரம் பஸ்டாண்டு கீழத்தெருவில் கழிவு நீரோடை கட்டும் பணி. | 3.30 |
| 4. | களக்காடு நகராட்சி வார்டு எண். 10 (171010L0048) (171010S0051), (171010L0049) ஜெகஜீவன்புரம், நடுத்தெரு, வடக்கு தெரு, தெற்கு தெரு ஆகிய தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | 5.70 |
| 5. | களக்காடு நகராட்சி வார்டு எண். 01 (171001R0012), (171001S0008) கலுங்கடி கீழத்தெருவில் பேவர் பிளாக் அமைக்கும் பணி. | 4.70 |
| 6. | களக்காடு நகராட்சி வார்டு எண்.26 கோவில்பத்து செட்டியார் தெரு, வார்டு எண். 07, கீழக்கருவேலன்குளம் பள்ளிகூடத் தெரு ஆகியவற்றில் சிறுபாலம் அமைக்கும் பணி. | 5,30 |
| | **மொத்தம்** | **58.00** |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலகக் குறிப்பு:**<br>மொத்த மதிப்பீடு ரூ. 58.00 இலட்சத்தில் 15வது மத்திய நிதிக்குழு மான்யத் தொகை ரூ. 56.62 லட்சம் போக மீதி தொகையான ரூ. 1.38 இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 29.12.2023 | 400 | **பொருள் எண். 15**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 10, பாரதிபுரம் கீழத்தெருவில் புதிய மின் கம்பம் அமைத்து 4 எண்ணம் புதிய தெருவிளக்குகள் அமைக்கவும், வார்டு எண்.05 நடராஜர் நகர் தெற்கு தெருவில் 5 எண்ணம் புதிய தெருவிளக்குகள் அமைக்க இணையதளம் வழியாக மின் வாரியத்திற்கு விண்ணப்பிக்க பதிவு கட்டணமாக ரூ. 10090/ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை சம்பந்தப்பட்ட மின் வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | சட்ட விதிப்படி செலவிட அனுமதிக்கப் படுகிறது. |
| 29.12.2023 | 401 | **பொருள் எண். 16**<br>களக்காடு நகராட்சியில் தெருவிளக்குகள் குடிநீர் திட்ட அமைப்புகள், மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களுக்கான மின் இணைப்புகளில் 10 எண்ணம் பயன்படாத நிலையில் உள்ளது. எனவே, அத்தகைய மின் இணைப்புகளை நிரந்தர மின்இணைப்பு துண்டிப்பு செய்ய சம்பந்தப்பட்ட மின் வாரியத்தினை கேட்டுக் கொள்ளப்பட்டது, சம்பந்தப்பட்ட மின் வாரிய அலுவலக கடிதம் மூலம் பதிவு கட்டணம் மற்றும் நிரந்தர துண்டிப்பு கட்டணமாக ரூ.13130/- செலுத்த கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை மின் வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>பயன்பாடு இல்லா மின் இணைப்புகளை நிரந்தர துண்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். அதற்கான கட்டண தொகையினை செலுத்தவும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | சட்ட விதிப்படி செலவிட அனுமதிக்கப் படுகிறது. |

<table>
<tr>
<td>29.12.2023</td>
<td>402</td>
<td><u>பொருள் எண். 17</u><br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 மற்றும் 8ல் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடங்களில் உள்ள செப்டிக் டேங் நிறைந்து விட்டதால் அதனை சுத்தம் செய்து மேற்கண்ட கழிப்பிடங்களை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டுவர பொதுமக்களின் கோரிக்கையின்படி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ரூ.20,000/ செலவு ஆகும் எனவே இச்செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>29.12.2023</td>
<td>403</td>
<td><u>பொருள் எண். 18</u><br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் இணைப்பு பழுது பார்த்தல் மற்றும் புதிய குடிநீர் இணைப்பு வழங்கப்படும்போது வசூல் செய்யப்படும் தொகையினை 10 சதவீதம் அதிகரித்து சாலை சீரமைப்பு கட்டணமாக கீழ்கண்ட விகிதத்தில் வசூல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>சாலையின் வகை</th><th>சாலையின் நீளம்</th><th>ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளசாலை பராமரிப்பு கட்டணம்(ரூ.)</th><th>தற்போது நிர்ணயம் செய்யப்படும் சாலை பராமரிப்பு கட்டணம் (ரூ.)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">மண் சாலை</td><td>0 முதல் 30 மீட்டர் வரை</td><td>2000</td><td>2220</td></tr>
<tr><td>30 முதல் 90 மீட்டர் வரை</td><td>3150</td><td>3465</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">தார் சாலை</td><td>0 முதல் 30 மீட்டர் வரை</td><td>4250</td><td>4718</td></tr>
<tr><td>30 முதல் 90 மீட்டர் வரை</td><td>5400</td><td>5940</td></tr>
<tr><td rowspan="2">3.</td><td rowspan="2">சிமிண்ட் சாலை/ பேவர் பிளாக் சாலை</td><td>0 முதல் 30 மீட்டர் வரை</td><td>4950</td><td>5445</td></tr>
<tr><td>30 முதல் 90 மீட்டர் வரை</td><td>6050</td><td>6655</td></tr>
</table>
</td>
<td>சட்ட விதிப்படி செயல்பட அனுமதிக்கப் படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ன்படி விதி எண். 355 (3)ன்படி, ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணங்களில் 10 சதவீதத்திற்கு குறையாத அளவு அதிகரிப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் மன்றம் மேற்கண்ட கூடுதல் கட்டணங்களுக்கு அனுமதியளிக்கலாம். | |
| 29.12.2023 | 404 | **<u>பொருள் எண். 19</u>**<br>களக்காடு நகராட்சியில் 2023-2024 ஆம் நிதியாண்டில் திருமதி. எம். ஜாக்குலின், க/பெ. பா. மனுவேல், வியாசராஜபுரம், களக்காடு என்பவரும், திரு. ரா. காமராஜ், த/பெ. ராஜையா, சிங்கிகுளம், களக்காடு என்பவரும் புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்பதாரர்களின் தகுதியின் அடிப்படையில் இந்நகராட்சியில் புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>நகர்மன்ற பொறியாளரின் அறிக்கையினை பெற்று தகுதி அடிப்படையில் புதிய ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | சட்ட விதிப்படி செயல்பட அனுமதிக்கப் படுகிறது. |
| 29.12.2023 | 405 | **<u>பொருள் எண். 20</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட கீழப்பத்தை பகுதியில் சமுதாய நலக்கூடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் மாநில அளவிலான தமிழ் மற்றும் ஆங்கில தினசரிகள் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி மலரில் பிரசுரம் செய்த வகைக்கு அக்கார்டு, சென்னை என்ற விளம்பர நிறுவனத்திற்கு அதன் பட்டியலின்படி ரூ.22730/-ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். இத்தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலுத்தவும், திட்ட நிதி கிடைக்கப்பெற்றவுடன் ஈடு செய்யவும் அனுமதிக்கலாம். | சட்ட விதிப்படி செயல்பட அனுமதிக்கப் படுகிறது. |
| 29.12.2023 | 406 | **<u>பொருள் எண். 21</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10, பாரதிபுரம் கீழத்தெருவில் புதிய தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகையாக ரூ. 77850/- மற்றும் வார்டு எண். 5, நடராஜர் தெருவில் புதிய தெருவிளக்குகள் அமைப்பதற்கு மதிப்பீட்டு கட்டணமாக ரூ.21220/ செலுத்த உதவி மின் பொறியாளர், நகர்புறம் களக்காடு அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். எனவே மேற்கண்ட தொகையினை மின் வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | சட்ட விதிப்படி செயல்பட அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 29.12.2023 | 407 | **பொருள் எண். 22**<br>களக்காடு நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2023–2024 ஆம் நிதியாண்டிற்கான Un Tied Grant ஒதுக்கீட்டின்படி ரூ. 58.00 இலட்சத்திற்கான பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து, தேர்வு செய்யப்பட்ட கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 18.12.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப் பட்டது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்த தாரர் பெயர் | மதிப்பீட்டினை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | களக்காடு நகராட்சி வார்டு எண். 23, சிதம்பராபுரம் ராஜபுதுரர் நாடார் தெருவில் பேவர் பிளாக் சாலை மற்றும் கழிவு நீரோடை, சிறுபாலம் அமைக்கும் பணி. | 19.00 | எஸ். அருணா | 0.01% குறைவு |
| | | | பி. மாடசாமி | 1.96% கூடுதல் |
| 2 | களக்காடு நகராட்சி வார்டு எண். 20, வியாசராஜபுரம் பஸ்டாண்டு கீழத்தெரு நடுவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. | 20.00 | என்.எம். புஷ்பம் | 0.01% குறைவு |
| | | | ஜே. ஜஸ்டின் பிரதீப் | 0.49% கூடுதல் |
| 3. | களக்காடு நகராட்சி வார்டு எண். 20 வியாசராஜபுரம் பஸ்டாண்டு கீழத்தெருவில் கழிவு நீரோடை கட்டும் பணி. | 3.30 | என்.எம். புஷ்பம் | 0.04% குறைவு |
| | | | ஜே. ஜஸ்டின் பிரதீப் | 0.17% கூடுதல் |
| 4. | களக்காடு நகராசி வார்டு எண். 10, ஜெகஜீவன்புரம் நடுத்தெரு, வடக்கு தெரு, தெற்கு தெரு ஆகிய தெருக்களில் பேவர் பிளாக் அமைக்கும் பணி. | 5.70 | ஆர். இராதாகிருஷ்ணன் | 0.02% குறைவு |
| | | | என்.எம். புஷ்பம் | 2.45% கூடுதல் |
| 5. | களக்காடு நகராட்சி வார்டு எண்.1, கலுங்கடி கீழத்தெருவில் பேவர் பிளாக் அமைக்கும் பணி. | 4.70 | ஆர். இராதாகிருஷ்ணன் | 1.02% குறைவு |
| | | | என்.எம். புஷ்பம் | 0.01% கூடுதல் |

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மதிப்பீட்டினை விட குறைவாக / மதிப்பீட்டு விலைக்கு ஒப்பந்தம் வழங்கிய ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தங்களை மன்றம் அனுமதிக்கலாம். | |
| 29.12.2023 | 408 | **<u>பொருள் எண். 23</u>**<br>களக்காடு நகராட்சி எல்கைக்குட்பட்ட நாங்குநேரி வட்டம், களக்காடு குறுவட்டம் களக்காடு பகுதி 1 புல எண். 1341/52ல் குடியிருந்து வரும் நபருக்கு நத்தம் இடத்தில் பட்டா வழங்க தடையின்மை சான்று கோரி களக்காடு வருவாய் துறை ஆய்வாளர் 06.07.2023 மற்றும் 23.08.2023ல் கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி இடம் நாங்குநேரி வட்டம், களக்காடு குறுவட்டம், பகுதி 1 புல எண். 1341/52ல் சுமார் 5 வருடங்களுக்கு மேலாக ஆட்சேபணையற்ற புறம்போக்கு இடத்தில் நத்தம் சர்க்கார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வரும் மனையினை வரன்முறைப்படுத்தி இலவச பட்டா வழங்க வரப்பெற்ற அரசாணை எண். 318 மற்றும் 408 வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 30.08.2019ன்படி கிராம நத்ததம் சர்க்கார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி ஆகிரமிப்பு செய்து குடியிருந்து வரும் **திரு. ரவிச்சந்திரன், த/பெ. சுப்பையா** என்பவரது குடியிருப்பிற்கு பட்டா வழங்க கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்கள் 08.08.2023ல் பரிந்துரை செய்துள்ளார். மேற்படி இடம் கிரைய ஆவண எண். 1357/2007ல் பத்திரம் பதிவு செய்த இந்நகராட்சி வரி விதிப்பு எண். 171/022/900370ல் வீட்டு வரி செலுத்தப்பட்டு வரப்படுகிறது, எனவே ஆட்சேபணையற்ற நத்தம் சர்க்கார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வரம் மனையினை வரன்முறைப்படுத்தி இலவச பட்டா வழங்க நகராட்சிக்கு தடை ஏதும் இல்லை என ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>அரசாணை எண். 318 மற்றும் 408, வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்.30.08.2019ன்படியும், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்களின் 08.08.2023 தேதிய பரிந்துரையின் அடிப்படையிலும் பட்டா வழங்க நகராட்சிக்கு தடை ஏதும் இல்லை என ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண். 244/ 2023/அ1). | சட்ட விதிகளை பின்பற்றி ஒப்புதல் வழங்குமாறு அனுமதிக்கப் பட்டது. |
| 29.12.2023 | 409 | **<u>பொருள் எண். 24</u>**<br>களக்காடு நகராட்சி எல்கைக்குட்பட்ட நாங்குநேரி வட்டம் களக்காடு குறுவட்டம் களக்காடு பகுதி 1 புல எண். 1341/52ல் குடியிருந்து வரும் நபருக்கு நத்தம் இடத்தில் பட்டா வழங்க தடையின்மை சான்று கோரி சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அவர்களின் கடிதம் எண். ஆ2/5895/2022, நாள். 23.01.2023 மற்றும் நாங்குநேரி வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் எண். | சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் வழங்குமாறு அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | ஆ2/324/2022 நாள். 18.10.2022 ஆகியவற்றை இணைத்து மனுதாரராகிய **திரு. பி. சுடலையாண்டி, த/பெ. பொன்னையா** விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி இடம் நாங்குநேரி வட்டம், களக்காடு குறுவட்டம், களக்காடு பகுதி 1 புல எண். 1387/8ல் சுமார் 5 வருடங்களுக்கு மேலாக ஆட்சேபனையற்ற புறம்போக்கு இடத்தில் நத்தம் சர்க்கார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வரும் மனையினை வரன் முறைப்படுத்தி இலவச பட்டா வழங்க வரப்பெற்ற அரசாணை எண். 318 மற்றும் 408 வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 30.08.2019ன்படி கிராம நத்தம் சர்க்கார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு பட்டா வழங்க கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்களின் 19.01.2022ல் பரிந்துரை செய்துள்ளார், மேலும் மேற்படி இடம் கிரைய ஆவண எண். 674/1992ல் பத்திரம் பதிவு செய்து இந்நகராட்சி வரி விதிப்பு எண். 171/010/900316ல் வீட்டு வரி செலுத்தப்பட்டு வரப்படுகிறது. எனவே ஆட்சேபணையற்ற நத்தம் சர்க்கார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி கடியிருந்து வரும் மனையினை வரன்முறைப்படுத்தி இலவச பட்ட வழங்க நகராட்சிக்கு தடை ஏதும் இல்லை என ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>அரசாணை எண். 318 மற்றும் 408 வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள். 30.08.2019ன்படியும், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்களின் 19.01.2022 தேதிய பரிந்துரையின் அடிப்படையிலும் பட்டா வழங்க நகராட்சிக்கு தடை ஏதும் இல்லை என ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.244/2023/அ1). | |
| 29.12.2023 | 410 | **<u>பொருள் எண். 25</u>**<br>களக்காடு நகராட்சி வார்டு 17, காந்தி வீதியில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய அலுவலக வளாகத்தில் இந்நகராட்சி வருவாயினை பெருக்கும் நோக்குடன் அரசின் 6வது மாநில நிதிகுழு மான்யம் பெற்று வணிக வளாகம் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கான முன்னேற்பாடாக மண் பரிசோதனை மற்றும் கட்டிட வரைபடம் ஆகியன தயாரித்து வழங்க முதல்வர் அரசு பொறியியல் கல்லூரி, பாளையங்கோட்டை அவர்களின் கேட்பு படி ரூ. 70800/- செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | சட்ட விதிப்படி செயல்பட அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr><td>29.12.2023</td><td>411</td><td>

**<u>பொருள் எண். 26</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை (நிலை) எண். 92ல் நகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம். மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதன் பேரில் அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகை 15% உயர்த்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் நகராட்சிக்கென சொந்தமாக உள்ள 43 கடைகளுக்கு 15% தொகை மற்றும் ஒரு கழிப்பிடத்திற்கு 5% தொகை ஆகியவை 2019–2020 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த நிலையில் தற்போது கீழ்க்காணும் 43 கடைகளுக்கு 15% தொகை மற்றும் ஒரு கழிப்பிடத்திற்கு 5% தொகை உயர்த்தப்பட்டு உள்ளது. இதன் முடிவடையும் காலம் 31.03.2026 ஆகும். எனவே, நகராட்சி கடைகள் மற்றும் கழிப்பிடத்திற்கு உயர்த்தப்பட்டுள்ள தொகையினை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

</td><td>சட்ட விதிமுறைப்படி செயல்பட அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

| வ. எண். | பெயர் மற்றும் குத்தகைதாரர் | தற்போதைய வாடகை ரூ. | 15 சதவீத கூடுதல் தொகை ரூ. | 15 சதவீதத்திற்கு பின் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ. | செலுத்த வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | R. சக்தி | 1122 | 168.30 | 1290.30 | **1290** |
| 2. | பக்கீர் முகைதீன் | 975 | 146.25 | 1121.25 | **1121** |
| 3. | விநாயகர் வேல் | 1122 | 168.30 | 1290.30 | **1290** |
| 4. | இசக்கிமுத்து | 1122 | 168.30 | 1290.30 | **1290** |
| 5. | S. அலி சேக் முகம்மது | 975 | 146.25 | 1121.25 | **1121** |
| 6. | G. சிவா | 1122 | 168.30 | 1290.30 | **1290** |
| 7. | மரியதாசன் | 1122 | 168.30 | 1290.30 | **1290** |
| 8. | மரியதாசன் | 1122 | 168.30 | 1290.30 | **1290** |
| 9. | S. கண்ணன் | 5020 | 753 | 5773.00 | **5773** |
| 10. | சில்கிஸ் சாமுவேல் | 3425 | 513.75 | 3938.75 | **3939** |
| 11. | சுனைதீன் | 3425 | 513.75 | 3938.75 | **3939** |
| 12. | ஜெகன் ஆபிரகாம் | 3425 | 513.75 | 3938.75 | **3939** |
| 13. | முகம்மது உசேன் | 3425 | 513.75 | 3938.75 | **3939** |
| 14. | திப்பு சுல்தான் | 3425 | 513.75 | 3938.75 | **3939** |
| 15. | செல்வின்துரை | 3425 | 513.75 | 3938.75 | **3939** |
| 16. | P.சௌந்திரபாண்டி | 5020 | 753 | 5773.00 | **5773** |
| 17. | P. ஹரி கிருஷ்ணன் | 3425 | 513.75 | 3938.75 | **3939** |
| 18. | M. சண்முகம் | 3425 | 513.75 | 3938.75 | **3939** |
| 19. | ஜெகன் ஆபிரகாம் | 3425 | 513.75 | 3938.75 | **3939** |
| 20. | S. பால்ராஜ் | 3425 | 513.75 | 3938.75 | **3939** |
| 21. | Y. ஆனந்தராஜ் | 3425 | 513.75 | 3938.75 | **3939** |
| 22. | M. ரமேஷ் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 23. | M. ரமேஷ் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 24. | M. ரமேஷ் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25. | M. ரமேஷ் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 26. | A. அசன் முகைதீன் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 27. | E. பலவேசம் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 28. | E. பலவேசம் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 29. | இரா. ஜேசுதாசன் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 30. | S. லீனா | 1045 | 156.75 | 1201.75 | **1202** |
| 31. | P. அந்தோணி | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 32. | A. ஐசக் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 33. | E. பிரபா | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 34. | அய்யாபிள்ளை | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 35. | E. பலவேசம் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 36. | A. அசன் முகைதீன் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 37. | A. அசன் முகைதீன் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 38. | A. அசன் முகைதீன் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 39. | பெ. மகாலிங்கம் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 40. | M. ரமேஷ் | 1148 | 172.20 | 1320.20 | **1320** |
| 41. | ப. மீராஷா | 1045 | 156.75 | 1201.75 | **1202** |
| 42. | பத்மசிவா (கழிப்பிடம்) | 3853 | 192.65 | 4045.65 | **4046** |
| 43. | பார்வதி (சுய உதவிக் குழு கட்டிடம்) | 250 | 37.50 | 287.50 | **288** |
| 44. | இணை இயக்குநர் (மீன் கடை) | 1308 | 196.20 | 1504.20 | **1504** |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 29.12.2023 | 412 | **<u>பொருள் எண். 27</u>**<br>களக்காடு நகராட்சி வார்டு எண். 11, காவலர் லைன் தெருவில் உள்ள காவல்துறைக்கு சொந்தமான காவலர் குடியிருப்பு கதவு எண். 1 முதல் 16 வரை உள்ள குடியிருப்புகள் இடிக்கப்பட்டு 2023 பிப்ரவரி முதல் கட்டிடங்கள் இல்லை எனவும், 2023–2024ம் நிதியாண்டு சொத்துவரி கேட்பிலிருந்து நீக்கம் செய்ய வேண்டியும் காவல் கண்காணிப்பாளர், திருநெல்வேலி அவர்களின் 18.08.2023 நாளிட்ட கடிதத்தின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், காவலர் குடியிருப்பு வரிவிதிப்பு எண். 171/8405 முதல் 171/8420 வரை உள்ள 16 எண்ணம் சொத்துவரி வரிவிதிப்புகளை 2023–2024ம் நிதியாண்டு சொத்துவரி கேட்பு பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்யவும் மற்றும் கேட்புத் தொகை ரூ. 3616/–யும் நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | சட்டப்படி செயல்பட அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr><td>29.12.2023</td><td>413</td><td><u>பொருள் எண். 28</u><br>களக்காடு நகராட்சி மூலம் வசூலிக்கப்படும் குத்தகை இனங்களில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை கட்டணங்களை உரிய தலைப்பில் செலுத்த தனியார் நிறுவனம் மூலம் தயாரித்து வழங்கியமைக்காக சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் (Relywin Tax info service, kovilpatti) கேட்புபடி ரூ.3000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். சம்பந்தப்பட்ட நிறுவனமான ரிலைவின் டேக்ஸ் இன்போ சர்வீஸ், கோவில்பட்டி என்ற நிறுவனத்திற்கு தொகையினை வழங்கலாம். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.</td><td>சட்டப்படி செலவினம் செய்ய அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>29.12.2023</td><td>414</td><td><u>பொருள் எண். 29</u><br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட வார்டுகளில் சாலைப் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண். 27, கோவில்பத்து பெரிய தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி.</td><td>4.50</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண். 25, பாண்டியாபுரம் நடுத்தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி.</td><td>8.60</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:</u><br>மன்றம் அனுமதிக்கலாம். இத்தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>29.12.2023</td><td>415</td><td><u>பொருள் எண். 30</u><br>களக்காடு நகராட்சி பேரூராட்சியாக இருந்த காலத்தில் (03.07.2017 முதல் 26.04.2018 வரை) செயல் அலுவலராக பணிபுரிந்த திருமதி.செ. கலாவதி அவர்களது பெயரில் நகராட்சியில் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் இருப்பில் உள்ள ரூ.162745/-ஐ சம்பந்தப்பட்ட செயல் அலுவலருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>மேற்படி காலங்கடந்த வைப்புத் தொகை குறித்து தணிக்கை அறிக்கை ஏதுமின்மையால் சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் பெயரில் உள்ள காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>சட்ட விதிப்படி செயல்பட அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>